# 2020

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
National Institute of Labour Studies

කම්කරු අමාත්‍යාංශය
தொழில் அமைச்சு
Ministry of Labour

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
# ஆண்டறிக்கை
# 2020

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
# ஆண்டறிக்கை - 2020

**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை**

**ஆக்கம்**
ஆய்வு,வெளியீடுகள் மற்றும் கருத்திட்டப் பிரிவு

**பதிப்பகம் :**
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
2 ஆவது தளம்
தொழில் செயலகம், கொழும்பு 05.

**அச்சிடல் :**
பிரின்டெக் எஸ்டப்ளிஸ்மன்ட் தனியார் கம்பனி
52/1, எக்வத்த வீதி, மிரிகானை
தொலைபேசி எண் - 0112 815 816
மின்னஞ்சல் முகவரி - sales@printec.lk
இணையதளம் - www.printec.lk

# பொருளடக்கம்


பக்கம்

**அத்தியாயம் ஒன்று : நிறுவகம்சார் விபரங்கள் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்**

1.1 அறிமுகம் 06
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் 06
1.3 பிரதான குறிக்கோள்கள் 06
1.4 நிறுவகத்தின் கட்டமைப்பு 07
1.5 நிறுவகத்தின் நிருவாகம் 07
1.6 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பதவியணி பற்றிய விபரங்கள் 08

**அத்தியாயம் இரண்டு : முன்னேற்றம்**

2.1. பயிற்சித் திட்டங்கள் 11
2.1.1 டிப்புளோமா கற்கைநெறிகள் 11
2.1.2 கற்கை நெறிகள் 12
2.1.3 குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள் 12
2.1.4. பயிற்சி செயலமர்வுகள் 14
2.2 பரீட்சைகள் 16

**அத்தியாயம் மூன்று : நிறுவகத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டம் மற்றும் மனித வள விபரங்களின் அடிப்படையில்)**

3.1 நிறுவகத்தின் செயலாற்றுகை 21
3.2 பதவியணி முகாமைத்துவம் 21
3.3 மனித வளங்களில் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு நிறுவகத்தின் செயலாற்றுகையைப் பாதிக்கின்றது 21
3.4 மனித வள அபிவிருத்தி 21
3.5 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 22

**அத்தியாயம் நான்கு : 2020 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

4.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 25
4.2 நிதி நிலைமை பற்றிய கூற்று 26
4.3 பணப் பாய்ச்சல் கூற்று 27
4.4 நிதிக் கூற்றுக் குறிப்புகள் 28-31
4.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 32-38
4.6 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையினால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட / எடுப்பதற்கு இணங்கப்பட்ட நடவடிக்கைகள் 39-41

# விளக்கப்படங்கள், அட்டவணைகள் மற்றும் வரைபுகள்

## விளக்கப்படங்கள்


| | | |
|---|---|---|
| விளக்கப்படம் 1.1 | நிறுவகத்தின் கட்டமைப்பு | 07 |


## அட்டவணைகள்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் ஆளுநர்கள் சபை | 07 |
| அட்டவணை 1.2 | 2020.12.31 இல் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பதவியணி பற்றிய விபரங்கள் | 08 |
| அட்டவணை 2.1 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட டிப்புளோமா கற்கைநெறிகள் | 12 |
| அட்டவணை 2.2 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சான்றிதழ் கற்கைநெறிகள் | 12 |
| அட்டவணை 2.3 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 |
| அட்டவணை 2.4 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 |
| அட்டவணை 2.5 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 |
| அட்டவணை 2.6 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 |
| அட்டவணை 2.7 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விசேட பயிற்சிசெயலமர்வுகள் | 14 |
| அட்டவணை 2.8 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சை சார்ந்த செயலமர்வுகள் | 14 |
| அட்டவணை 2.9 | 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சைகள் | 16 |
| அட்டவணை 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 21 |
| அட்டவணை 3.2 | நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கள் | 21 |
| அட்டவணை 3.3 | பணப் பாய்ச்சல் கூற்று | 22 |
| அட்டவணை 4.1 | நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து இலக்கு வைக்கப்பட்ட மற்றும் அடையப்பெற்ற நிதி முன்னேற்றங்கள் | 25 |
| அட்டவணை 5.1 | நிறுவகத்தின் பதவியணி | 26 |
| அட்டவணை 5.2 | பதவியினர் பயிற்சித் திட்டங்கள் | 27 |


## வரைபுகள்


| | | | |
|---|---|---|---|
| வரைபு | 2.1 | 2020 ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களின் ஒட்டுமொத்த மொத்த வருமானம் | 15 |
| வரைபு | 2.2 | 2020 ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களின் மாதாந்த மொத்த வருமானம் | 15 |
| வரைபு | 2.3 | 2020 ஆம் ஆண்டில் பரீட்சைகள் மூலமான மொத்த வருமானம் | 17 |

# அத்தியாயம் ஒன்று

## நிறுவகம்சார் விபரங்கள் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

## 1.1 அறிமுகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இந்நிறுவகம், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டு, 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரச துறை அலுவலர்கள் ஆகிய முத்தரப்பு அக்கறைதாரர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

தொழில் சட்டவாக்கங்கள், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி நன்கு அறிந்த ஆக்கத்திறனுள்ள தொழில் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதே இந்த நிறுவனத்தின் முதன்மையான பணியாகும். அதிக செயல்திறன் மிக்க சேவையை வழங்கும் நோக்கத்துடன், தொழிற் செயலகத்தின் இரண்டாவது தளத்தில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

### தொலைநோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான தொழிற்றுறை அமைதியும் நல்லிணக்கமும்.

### செயற்பணி

கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி மூலம் ஆக்கத்திறனுள்ள தொழில் உறவுகளை விருத்தி செய்வதற்கும், பராமரிப்பதற்கும் முத்தரப்பு அங்கத்தவர்களுக்கு உதவுதல்.

## 1.3 பிரதான குறிக்கோள்கள்

- உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவகங்களின் ஒத்துழைப்புடன் வேலையாளர் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அபிவிருத்தி செயன்முறையில் அவர்களை செயலூக்கமுள்ள பங்குதாரர்களாக ஆக்கும் நோக்கில் வேலையாளர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- தொழில் கற்கைகள் பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.

- ஆய்வுகளைப் பொறுப்பேற்றல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில் கற்கைகள் தொடர்பான கற்கை நெறிகளை வழங்குதல்.

- நூலகங்கள் மற்றும் தகவல் சேவைகளை தாபித்தலும் பராமரித்தலும்.

- இதேபோன்ற நோக்கங்களுடனுள்ள தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தாபனங்கள், அமைப்புகள், மற்றும் சங்கங்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து, பணியாற்றுதல்.

- பல்கலைக்கழகங்கள் மற்றும் அது போன்ற நிறுவனங்களின் உதவியுடன் தொழில் கல்விசார் டிப்புளோமா கல்வி உள்ளடங்கலான கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் அவ்வாறு தேவைப்படுகின்றவிடத்து சான்றிதழ்களையும், டிப்புளோமாக்களையும் வழங்குதல் அத்துடன்.

- தொழிற்றுறைசார் நல்லிணக்கத்தை பேணும் நோக்கில் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் ஊக்குவித்தல்.

## 1.4 நிறுவகத்தின் கட்டமைப்பு




விளக்கப்படம் 1.1 நிறுவகத்தின் கட்டமைப்பு

## 1.5 நிறுவகத்தின் நிருவாகம்

நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக, சபையானது, இந்த சட்டத்தின் மூலம் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை உறுதல், ஆற்றுதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

ஆளுநர்கள் சபையானது, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆறு பதவிவழி உறுப்பினர்கள் மற்றும் பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தொழில் துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் சபையின் தவிசாளராகவும், தொழில் ஆணையாளர் அதிபதி துணைத் தவிசாளராகவும் காணப்படுகின்றனர்.

அட்டவணை 1.1 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் ஆளுநர்கள் சபை

| பெயர் | பதவி | நிறுவகம் |
|---|---|---|
| திரு.எம்.பி.டீ.யு.கே. மாபா பத்திரண | தவிசாளர் (2020.08.14 முதல்) | தொழில் அமைச்சின் செயலாளர் |
| திரு.டீ.எம். சரத் அபயகுணவர்தன | தவிசாளர் (2020.08.13 வரை) | |
| திரு.பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி | துணைத் தவிசாளர் (2020.10.20 முதல்) | தொழில் ஆணையாளர் அதிபதி |
| திரு.ஏ.விமலவீர | துணைத் தவிசாளர் (2020.10.19 வரை) | |
| திரு.ஜே.எம்.எஸ்.பி.பீ.ஜயதிலக | பணிப்பாளர் அதிபதி (பதில்) (2020.10.21 முதல்) | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |
| திருமதி.எச்.எம்.டீ.என்.கே.வடலியத்த | பணிப்பாளர் அதிபதி (பதில்) (2020.10.20 வரை) | |
| திருமதி.டீ.டபிள்யு.டபிள்யு. பி.குணரத்ன | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | பிரதிப் பணிப்பாளர், நிதி அமைச்சு |
| திருமதி.பி.டீ.எம்.எல்.தர்மசேன | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | பிரதிப் பணிப்பாளர், கைத்தொழில் அமைச்சு |

| | | |
|---|---|---|
| பேராசிரியர்.எச்.டீ.கருணாரத்ன | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | சிரேஸ்ட பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டாக்டர்.டபிள்யு.எஸ்.சந்திரசேகர | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | கொழும்பு பல்கலைக்கழகம |
| திரு.டிள்யூகே.எல்.வீரசிங்க | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | பணிப்பாளர் அதிபதி, பிரதம நிறைவேற்று அலுவலர், தொழில்தருநர்கள் சமாஜம் |
| திரு.டித்த டி அல்விஸ் | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | தொழில்தருநர்கள் சமாஜத்தின் பிரதிநிதிகள் |
| திரு.ஆர்.பண்டிதகோறாள | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | தொழில் சங்கப் பிரதிநிதிகள் |
| திரு.அமலபால கமகே | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | தொழில் சங்கப் பிரதிநிதிகள் |
| திரு.பி.கே.சிரசேன | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | தொழில் சங்கப் பிரதிநிதிகள் |
| திரு.பந்துல சமன்குமார | ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் | தொழில் சங்கப் பிரதிநிதிகள் |
| | | |

## 1.6 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பதவியணி பற்றிய விபரங்கள்

அட்டவணை 1.2 2020.12.31 இல் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பதவியணி பற்றிய விபரங்கள்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி |
|---|---|---|
| பணிப்பாளர் அதிபதி | 01 | 01 |
| பணிப்பாளர் (ஆய்வு, உசாவுகை, திட்டமிடல் மற்றும் வெ ளியீடு) | 01 | - |
| பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) | 01 | - |
| உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் | 05 | 02 |
| கணக்காளர் | 01 | 01 |
| அகக் கணக்காய்வு அலுவலர் | 01 | - |
| வர்த்த ஊக்குவிப்பு அலுவலர் | 01 | 01 |
| நிருவாக அலுவலர் | 01 | 01 |
| திட்டமிடல் அலுவலர் | 01 | - |
| நிதி அலுவலர் | 01 | - |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | 03 | 03 |
| அபிவிருத்தி அலுவலர் | 01 | - |
| தகவல்தொழில்நுட்ப அலுவலர் | 01 | - |
| நூலகவியலாளர் | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | - |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) | 18 | 08 |
| சாரதி | 03 | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 |
| மொத்தம் | **45** | 18 |

# அத்தியாயம் இரண்டு

முன்னேற்றம்

# நிறுவகத்தின் முன்னேற்றம்

## 2.1. பயிற்சித் திட்டங்கள்

ஐக்கியமான தொழில் உறவுகளைப் பேணுகின்ற அதேவேளை, சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற ஆக்கத்திறனுள்ள தொழிலணியொன்றை உருவாக்குவதற்கான மூன்று பரந்த விடயப் பரப்புகளை மையமாகக் கொண்ட பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளை இந்த நிறுவகம் நடத்தியுள்ளது.

1. தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள்
2. மனித வளங்கள் முகாமைத்துவம்
3. வேலைத்தல ஆக்கத்திறன்

இந்த நிறுவகமானது, அரச துறை மற்றும் பகுதியளவிலான அரச துறையில் உள்ள பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களின் இயல்திறனை கட்டமைப்பதற்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குகின்றது. இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்ட கால கற்கைநெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன. அவை, தொழில் சட்டங்கள் மற்றும் தொழில் துறை உறவுகள், மனித வள முகாமைத்துவம், உற்பத்தித்திறன், அலுவலக முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு உள்ளடங்கலாக பரந்துபட்ட பல்வேறு துறைகளை மேவுகின்றன.

### வள ஆளர்கள்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், உரிய துறையில் நிபுணத்துவம் பெற்ற அனுபவம் வாய்ந்த வெளிவளவாளர்கள் குழுத்தினால் நடத்தப்படுகின்றன. அவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தேசிய மட்டத்திலான கல்வி நிறுவகங்களின் முன்னாள் மற்றும் பணியாற்றுகின்ற கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரச, தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற / ஓய்வு பெற்ற சிரேஷ்ட அலுவலர்கள் காணப்படுகின்றனர்.

### 2.1.1 டிப்புளோமா கற்கைநெறிகள்

2020 ஆம் ஆண்டில் நீண்டகால பயிற்சித் திட்டங்களின் கீழ் இரண்டு டிப்புளோமா கற்கைநெறிகள் நிறைவுசெய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் இரண்டு புதிய டிப்புளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு டிப்புளோமா கற்கைநெறியும் எட்டு தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு தொகுதியும் ஆறு வார விரிவுரைகளைக் கொண்டுள்ளது.

டிப்புளோமா கற்கைநெறிகளுடன் தொடர்புபட்டுள்ள தொகுதிகள் பின்வருமாறு.

தொழில் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் சார்ந்த உரிய தொகுதிகள்.

- தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
- சமூகப் பாதுகாப்பு
- தொழிற்றுறை உறவுகள்,தொழிற் சங்கங்கள் மற்றும் சமூகக் கலந்துரையாடல்
- தொழிற்றுறைப் பிணக்குளைத் தீர்த்தல்
- தொழில் முடிவுறுத்தல்
- தொழிற்றுறை உறவுகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- தொழில் சட்டங்கள் தொடர்பான இலங்கை சட்ட முறைமை

மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்புளோமா பாடநெறியுடன் தொடர்புடைய தொகுதிகள்

- முகாமைத்துவ செயன்முறையும், ஒழுங்கமைப்பும்
- மனித வள முகாமைத்துவம்: எண்ணக்கருவும், நடைமுறைகளும்
- மனிதவள முகாமையாளர் ஒருவருக்கு அத்தியவசியமான திறன்கள்
- ஊக்குவித்தல் மற்றும் உயர் ஆக்கத் திறன்
- தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள்
- நிறுவனம்சார் நடத்தை
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மனித வள முகாமைத்துவத்தில் போக்குகள் மற்றும் சவால்கள்

அட்டவணை 2.1 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட டிப்புளோமா கற்கைநெறிகள்

| தொ.இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள் (ஆங்கிலமொழி மூலம் இணையத்தில்) | 2020 / 2021 | 20 |
| 02 | தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள் (சிங்கள மற்றும் ஆங்கிலமொழி மூலம் இணையத்தில்) | 2020 / 2021 | 24 |

## 2.1.2 கற்கை நெறிகள்

அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை அலுவலர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஒவ்வொரு பிரிவும் ஆறு நாட்கள் எடுக்கின்ற,தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள், மனித வள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், கொள்வனவு, அகக் கணக்காய்வு மற்றும் ஆங்கிலம், தமிழ் மொழி ஆகிய துறைகளை உள்ளடக்கிய சான்றிதழ் கற்கைநெறிகள் நடத்தப்படுகின்றன.

அட்டவணை 2.2 - 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சான்றிதழ் கற்கைநெறிகள்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஆண்டு | |
|---|---|---|---|
| 01 | பாதுகாப்பு அலுவலர்களின் அறிவினை வளர்த்தல் | 2020.07.03 - 2020.09.11 | 33 |
| **இணையவழி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| 02 | தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள் (ஆங்கிலமொழி மூலம்) | 2020.06.14 - 2020.06.26 | 32 |
| 03 | தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள் (சிங்களமொழி மூலம்) | 2020.07.24 - 2020.09.11 | 19 |
| 04 | தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள் (ஆங்கிலமொழி மூலம்) | 2020.10.08 - 2020.12.06 | 34 |
| 05 | மனித வள முகாமைத்துவம் (ஆங்கில மொழி மூலம்) | 2020.11.26 - 2021.02.18 | 22 |
| 06 | மனித வள முகாமைத்துவம் (சிங்களமொழி மூலம்) | 2020.12.15 - 2021.09.03 | 14 |

## 2.1.3 குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அதன் பயிற்சி நிலையத்திலும் வெளி நிறுவனங்களின் வளாகங்களிலும் இரண்டு நாள், மூன்று நாள் மற்றும் நான்கு நாள் கால குறுகிய கால கற்கைநெறிகளை நடத்துகின்றது.

175 பயிற்சியாளர்களுக்கு வெளித்தரப்பினர் விடுத்த கோரிக்கைகளின் பேரில் ஐந்து பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.3 -2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் ஆற்றல்களை விருத்திசெய்தல் | 2020.07.31 | 10 |
| 02 | பெறுகைக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் காலதாமதங்களைக் குறைத்தல் | 2020.08.11,14 | 35 |

| | | | |
|---|---|---|---|
| 03 | கோப்பிடுதல் | 2020.08.14 | 50 |
| 04 | கோப்பிடுதலும் குறிப்புகளை எழுதுதலும் | 2020.09.24 | 40 |
| 05 | பெறுகைகள் மற்றும் கொடுப்பனவு களை முகாமைசெய்தல் | 2020.09.24 | 40 |

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, 2020 ஆம் ஆண்டில் ஒரு நாள், இரண்டு நாள் மற்றும் மூன்று நாள் என்று 17 குறுகிய கால கற்கை நெறிகளை நடத்தியுள்ளது.

### ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.4: 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டங்கள்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தனிநபர் கோப்புக்களை வினைத்திறனுடன் பேணுதல் | 2020.02.25 | 21 |
| 02 | அரச அலுவலர்களின் சம்பளத்தைத் தயாரித்தல் | 2020.02.27 | 21 |
| 03 | தொழிற்சங்கங்களின் பங்குகளும் பொறுப்புகளும் | 2020.03.12 | 41 |
| 04 | தொழிற்சட்டங்களின் புதிய போக்குகளும் | 2020.03.13 | 08 |
| 05 | கோப்பிடுதல் | 2020.08.24 | 12 |
| 06 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களை வரைதல் | 2020.09.11 | 13 |
| 07 | கூட்டு உடன்படிக்கைகள் | 2020.12.15 | 31 |
| | **இணைய நிகழ்ச்சித்திட்டங்கள்** | | |
| 01 | ஒழுக்காற்று நடவடிக்கை | 2020.11.30 | 30 |
| 02 | தொழில் சட்டங்கள் பற்றிய அறிவு | 2020.12.16 | 09 |

### இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.5: 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இரண்டு நாள் பயிற்சித் திட்டம்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சாரதி திறன் விருத்தி | 2020.02.10, 11 | 12 |
| 02 | அலுவலக முகாமைத்துவமும் நிதி ஒழுங்குவிதிகளும் | 2020.02.24, 25 | 14 |
| 03 | துணை அலுவலர்களுக்கான பெறுகைச் செயன்முறை | 2020.03.11, 12 | 26 |
| 04 | அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான கடமைகள் | 2020.03.12, 13 | 11 |
| 05 | பெறுகைக் குழுவினால் ஏற்பட்ட குறைபாடுகளையும் காலதாமதங்களையும் குறைத்தல் | 2020.08.10, 18 | 09 |
| 06 | சாரதி திறன் விருத்தி | 2020.08.17, 18 | 07 |
| 07 | தொழில் சட்டங்கள் பற்றிய அறிவு | 2020.09.24, 25 | 28 |

### மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.6: 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளித்தல் | 2020.02.20,27, 03.05 | 15 |

### 2.1.4. பயிற்சி செயலமர்வுகள்

அட்டவணை 2.7: 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விசேட செயலமர்வுகள்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தொழில் முடிவுறுத்தல் | 2020.07.30 | 20 |

**பரீட்சைசார் செயலமர்வுகள்**

அட்டவணை 2.8: 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விசேடசெயலமர்வுகள்

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட இடம் | நடத்தப்பட்ட திகதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக முகாமைத்துவ, நிதி ஒழுங்குவிதிகள் | அரச மருத்துவ கூட்டுத்தாபனம் | 2020.02.06,07 | 19 |
| 02 | விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | தேசியசேமிப்பு வங்கி | 2020.02.07 | 218 |
| 03 | விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | சிரம வாசனா நிதியம் | 2020.07.18,19, 20 | 05 |
| 04 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 01 | சுகதாதச தேசிய விளையாட்டுகள் கட்டத்தொகுதி | 2020.08.18 | 08 |
| 05 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 02 | | 2020.08.21 | 10 |
| 06 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 03 | | 2020.08.25 | 46 |
| 07 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 04 | | 2020.08.28 | 04 |
| 08 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 05 | | 2020.09.04 | 08 |
| 09 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 06 | | 2020.09.17 | 05 |
| 10 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 01 | தேசிய இளைஞர் படை | 2020.09.18 | 60 |
| 11 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 02 | | 2020.09.25 | 36 |
| 12 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 03 | | 2020.09.25 | 04 |
| 13 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 04 | | 2020.09.30 | 118 |
| 14 | வினைத்திறன் தடைகாண் பரீட்சை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் 04 | | 2020.10.12 | 02 |

**நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 2020 சனவரி முதல் டிசெம்பர் வரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான மொத்த வருமானம் பின்வருமாறு ('ரூபாவில் தரப்பட்டுள்ளது)**




வரைபு 2.1 2020 சனவரி முதல் டிசெம்பர் வரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான மொத்த வருமானம்

**2020 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான மொத்த வருமானம்**




வரைபு 2.2 - 2020 ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மாதாந்த மொத்த வருமானம்

## 2.2 பரீட்சைகள்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, பல ஆண்டுகளாக கோரிக்கைகளின் பேரில் பொது கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு பரீட்சைகளை நடத்தி வருகின்றது. இவ்வாறு நிறுவகத் தேவைகளின் பேரில் நடத்தப்படுகின்ற பரீட்சைகளில் பதவியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைகள், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள், மதிப்பீடு மற்றும் சேவை ஊக்குவிப்பு பரீட்சைகள் ஆகியன அடங்குகின்றன. மேலும், நிறுவகத்தால் நடத்தப்படுகின்ற டிப்புளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் தொடர்பான பரீட்சைகள் அதன் வாடிக்கையாளர்களுக்கு விரைவான சேவையை வழங்குகின்ற அதே நேரத்தில் பரீட்சைகளின் இரகசியத்தன்மையையும் உறுதிசெய்கின்றன.

2020 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்றுநோய் நிலவிய போதிலும், 2020 ஆம் ஆண்டில் இருபது பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்ததுடன், வெளி நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சைகள் மூலம் 3.03 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. இந்த பரீட்சைகளுக்கு மொத்தமாக 1160 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

அட்டவணை 2.9 -2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரீட்சைகள்

| தொ.இ | மாதம் | பரீடசையின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | பெப்ரவரி | தேசிய சேமிப்பு வங்கியின் பதவி உயர்வு பரீட்சை | 2020.02.29 | 235 | 464,825.00 |
| 2 | | தே.தொ.க.நிறுவகத்தின் முதன்மையான சேவை பிரிவின் அலுவலர்களுக்கான வினைத்திறன்தடை காண் பரீட்சை | 2020.02.27 | 02 | 36,050.00 |
| 3 | | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தர உயர்வு பரீட்சை | 2020.06.16 | 09 | 23,330.00 |
| 4 | யூலை | தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவனத்தின் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | 2020.07.15 | 10 | 72,875.00 |
| 5 | | தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.07.16 | 03 | 57,025.00 |
| 6 | | அரசாங்க தகவல் திணைக்களத்தின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.07.28 | 14 | 15,300.00 |
| 7 | | தெங்கு வளர்ப்பு சபையின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.07.29 | 152 | 671,200.00 |
| 8 | ஓகஸ்ட் | தொழில் திணைக்களத்தின் சட்ட அலுவலர்களுக்கான வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.08.12 | 03 | 34,825.00 |
| 9 | | சிரம வாசன நிதியத்தின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.08.13 | 05 | 78,000.00 |
| 10 | | தொழில் திணைக்கள தொழில் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.08.29 | 175 | 276,750.00 |
| 11 | | தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலகங்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.08.29 /30 | 66 | 289,925.00 |
| 12 | | காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.08.28 | 04 | 44,800.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | செப்ரெம்பர் | தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் 1 அலுவலருக்கான முதலாவது வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.09.04/10/11 | 02 | 65,775.00 |
| 14 | | மகளிர் , சிறுவர் அலுவலகள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.09.12 | 05 | 70,650.00 |
| 15 | | இலங்கை தேயிலை சபையின் தேயிலை பரிசோதனையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை | 2020.09.19 | 288 | 385,725.00 |
| 16 | | சுகததாஸ தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகாரசபையின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.09.10/22 | 81 | 310,975.00 |
| 17 | | காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.09.30 | 02 | 38,250.00 |
| 18 | | மகளிர், சிறுவர் அலுவலகள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.09.30 | 01 | 29,275.00 |
| 19 | நவம்பர் | உயர் கல்வி அமைச்சின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.11.23 | 01 | 33,275.00 |
| 20 | | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் வினைத்திறன் தடை காண் பரீட்சை | 2020.11.12 | 01 | 29,275.00 |

**வரைபு 2.3 : 2020 ஆம் ஆண்டில் பரீட்சைகள் மூலமான மொத்த வருமானம்**



## 2.3 கருத்தரங்குகள், ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள்

கருத்திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு 2020 யூன் மாதம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் பிரகாரம் புதிய பிரிவாக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பிரிவின் முதன்மையான நோக்கங்கள் கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல், பத்திரிகைகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல் மற்றும் தொழில் கற்கைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகளை நடத்துதல் ஆகும்.

### "வேலையில் பெண்" ஆய்வுக் கருத்தரங்கு

"வேலையில் பெண்" என்ற தலைப்பில் இணையவழி ஆய்வு கருத்தரங்கு வெற்றிகரமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 கட்டுரைகள் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தன. ஆர்வமுள்ள தரப்புகளுக்கிடையில் இறுவட்டுக்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

# அத்தியாயம் மூன்று

நிறுவகத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள்

(செயல் திட்டம் மற்றும் மனித வள விபரங்களின் அடிப்படையில்)

## 3.1 நிறுவகத்தின் செயலாற்றுகை

அட்டவணை 3.1 நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து இலக்கு வைக்கப்பட்ட, அடையப்பட்ட நிதி முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டம் | நிதி ('ரூபா) | | பௌதீகம் | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் | 6,728,000.00 | 6,054,000.00 | 06 | 05 |
| சான்றிதழ் கற்கைநெறிகள் | 1,898,000.00 | 2,122,000.00 | 06 | 06 |
| தேவையின்பேரில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1,953,000.00 | 420,000.00 | 35 | 05 |
| குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 3,776,000.00 | 1,897,000.00 | 41 | 17 |
| பயிற்சி செயலமர்வுகள் | 495,000.00 | 100,000.00 | 05 | 01 |
| பரீட்சைகளை நடத்துதல் | 6,000,000.00 | 3,030,605.00 | 18 | 20 |
| மொத்தம் | 20,250,000 | 13,623,606.00 | | |

## 3.2 பதவியணி முகாமைத்துவம்

அட்டவணை 3.1 நிறுவகத்திலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை

| | நிறுவகம் | சிரே'ட மட்டம் | | உயர் மட்டம் | | இரண்டாவது மட்டம் | | ஆரம்ப மட்டம் | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப் பட்ட எண். | பணிக் கமர்த்தப்பட்ட எண்ணி. | அனுமதிக்கப் பட்ட எண். | பணிக்கமர்த்தப் பட்ட எண்ணி. | அனுமதிக்கப் பட்ட எண். | பணிக்கமர்த்தப் பட்ட எண்ணி. | அனுமதிக்கப் பட்ட எண். | பணிக்கமர்த்தப் பட்ட எண்ணி. | அனுமதிக்கப் பட்ட எண். | பணிக்கமர்த்தப் பட்ட எண்ணி. | வெற்ற'டங்களின் எண்ணிக்க |
| 1 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 09 | 03 | 13 | 05 | 18 | 08 | 05 | 02 | 45 | 18 | 27 |

## 3.3 மனித வளங்களில் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு நிறுவகத்தின் செயலாற்றுகையைப் பாதிக்கின்றது

2019 ஆம் ஆண்டில், நிறுவகத்தில் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தின் நிதி நிலைமை கோவிட்-19 தொற்றுநோய் பரவியதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் பல சவால்களை எதிர்கொண்டிருந்தது. நிறுவகத்தின் நிதி நிலைமை பலவீனமடைந்துவரும் நிலையில், இது நிதி இருப்பு மீது தாங்க முடியாத சுமையாக மாறக்கூடும் என்பதால், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரையும் நியமிக்க முடியவில்லை ஆகவே, இந்நிறுவகம், நிறுவகத்தின் செலவினங்களை விவேகத்துடன் நிருவகிப்பதற்கு வழிவகுத்துள்ள அதிகபட்ச ஆக்கத்திறன் மற்றும் செயல்திறனைக் கொண்ட குறைந்தபட்ச பணியாளர்களுடன் பராமரிக்கப்படுகின்றது

## 3.4 மனித வள அபிவிருத்தி

அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயிற்சித் திட்டங்களின் மூலம் பல முக்கியகுறிக்கோள்களை அடைய முயற்சிக்கப்படுகின்றது. அலுவலர்களின் திறன் மேம்பாடு மற்றும் மனித வள மேம்பாடு ஆகியவை அவற்றில் மிகவும் முக்கியமானவை. இந்த பயிற்சி திட்டங்கள், அதிகளவில் வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அவர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற வளங்களைக் கொண்டு தொழில்சார் அபிவிருத்திக்கு புதிய ஊடகங்கள், தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு அலுவலர்களை ஊக்குவிப்பதை நோக்கியவையாகும். மேலும், நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமும், மொழித் திறனை மேம்படுத்துவதன் மூலமும், மறுவகையில் பயனுள்ள நிறுவன உறவுகளைக் கட்டமைப்பதற்கு பங்களிப்புச் செய்கின்ற அலுவலர்களை சேவைநாடுநர்களுக்கு அதிக அனுசரணையான சேவையை வழங்குவதற்கு இயலசெய்கின்றது. இந்த பயிற்சித் திட்டங்களின் பொதுவான குறிக்கோள் முறையான,

ஆளமானஆயவொன்றினூடாக இனங்காணப்பட்ட பயிற்சித் தேவைப்பாடுகளை உரிய அலுவலர்களுக்கு வழங்குவதன் அனுபவமுள்ள, அறிவுள்ள தொழில் அணியொன்றை உருவாக்குவதாகும். 2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சித் திட்டங்களில் அலுவலர்கள் பங்குபற்றிமை பற்றிய விபரம் பின்வருமாறு.

### 3.5 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 3.2 பதவியினர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| பயிற்சி செயலமர்வின் / கற்கைநெறியின் பெயர் | இடம் | திகதி | பங்குபற்றிய அலுவலர்கள் | செலவீனம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. தொழில் சட்டங்கள் மற்றும்தொழில்சார் உறவுகள் | தே.தொ.க.நி | 2019 /2020 | 1. திருமதி ஏ.எஸ். ஆர்.ஹலால<br>2. திருமதி.என். எம்ஜோதிபால | 96,000.00 |
| 22. அலுவலக முகாமைத்துவமும் நிதி ஒழுங்குவிதிகளும் | தே.தொ.க.நி | 2020.02.24,25 | 1. திருமதி சர்மிலா ரிவ்வான் | 8,000.00 |
| 3. கணக்காய்வுக்குப் பதிலளித்தல் | தே.தொ.க.நி | 2020.02.20,27<br>2020.03.05 | 1. திருமதி.லாங்கிகா வீரசிங்க<br>2. திரு.ருச்சித சந்திம | 20,000.00 |
| 4. கோப்பிடுதல் | தே.தொ.க.நி | 2020.08.24 | 1. திருமதி சர்மிலா ரிவ்வான்<br>2. திருமதி.ஜயானி தர்ரிகா<br>3. எம்கே.எச். வணிசேகர<br>4. திருமதி முதித கண்டம்பி | - |

# அத்தியாயம் நான்கு

2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

4.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**அட்டவணை 4.1 2020.12.31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று**

| | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **தொழிற்படு வருமானம்** | | | |
| வருமானம் | 4 | 15,932,955.01 | 34,124,988.63 |
| மீண்டெழும் மீள்பெறுகைகள் | 5 | 6,100,000.00 | 10,768,853.53 |
| **மொத்த வருமானம்** | | 22,032,955.01 | 44,893,842.16 |
| | | | |
| **தொழிற்படு செலவினங்கள்** | | | |
| தனிப்பட்ட வேதனாதிகள் | 6 | 14,506,256.23 | 14,220,042.83 |
| போக்குவரத்து | 7 | 66,200.00 | 3,256,997.11 |
| விநியோகமும் நுகரக்கூடியவையும் | 8 | 928,811.80 | 1,087,028.72 |
| பராமரிப்பு | 9 | 1,405,113.56 | 1,574,247.53 |
| ஒப்பந்த சேவைகள் | 10 | 6,175,515.60 | 9,408,565.93 |
| பெறுமானத்தேய்வும் பிற்போடப்படசெலவீனங்களும் | 11 | 2,005,803.84 | 1,708,668.62 |
| ஏனைய தொழிற்படுசெலவீனங்கள் | 12 | 1,197,614.00 | 2,560,507.79 |
| நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் | 13 | 3,173,958.88 | 10,867,467.23 |
| **மொத்த தொழிற்படு செலவினங்கள்** | | 29,459,273.91 | 44,683,525.76 |
| | | | |
| தேறிய மிகை/(குறை) | | (7,426,318.90) | 210,316.40 |
| | | | |

## 4.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

### அட்டவணை 4.2 - 2020.12.31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 14 | 9,856,537.24 | 10,580,528.78 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | 15 | 1,087,429.45 | 1,170,525.15 |
| பெறத்தக்கவைகள் | 16 | 2,399,259.85 | 11,094,380.92 |
| பண முற்பணங்கள் | 18 | - | 1,250.00 |
| நிலையான வைப்பு | 24 | 38,779,423.17 | 26,172,513.93 |
| பணமும் பணத்திற்கு சமமானவையும் | 19 | 10,495,247.31 | 19,918,387.00 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 62,617,897.02 | 68,937,585.78 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| **உறப்பட்ட செலவினங்கள்** | 20 | 6,079,891.94 | 1,588,763.23 |
| முற்பணமாக பெறப்பட்டவை | 17 | 1,618,086.25 | 1,631,000.00 |
| **மொத்தச் தேறிய சொத்துக்கள்** | | 54,919,918.83 | 65,717,822.55 |
| **தேறிய சொத்துக்கள்/ நிகரப்பங்கு** | | | |
| திரட்டிய நிதியம் | | | |
| 2020.1.01 இலுள்ளவாறு கொண்டுவரப்பட்ட நிலுவை | | 65,717,822.55 | 64,187,120.89 |
| முன்னைய ஆண்டு தொடர்பான சீராக்கல்கள் | 21 | (4,408,727.67) | 296,500.00 |
| 2020.1.01 இல் சீராக்கப்பட்ட நிலுவை | | 61,309,094.88 | 64,483,620.89 |
| மூலதன மீள்பெறுகை | 22 | 1,000,000.00 | 198,553.00 |
| அமைச்சுப் பதவியினருக்கான வேதனம் | 23 | 37,142.85 | 825,332.26 |
| ஆண்டுக்கான மிகை/(குறை) | | (7,426,318.90) | 210,316.40 |
| | | 54,919,918.83 | 65,717,822.55 |

07தொடக்கம் 09ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்கம் 10 தொடக்கம் 36 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் ஒருங்கிணைந்த பகுதிகளாக அமைகின்றன. இலங்கை அரச துறைக் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவான இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர்கள் சபை பொறுப்பானதாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள்சார்பாக ஒப்பமிடப்பட்டவையாகும்.

**லாங்கிகா வீரசிங்க**
கணக்காளர்

**ஜே எம் எஸ் பி பீ ஜயதிலக**
பணிப்பாளர் அதிபதி (பதில்)

**டி.டபிள்யு டபிள்யு பி குணரத்ன**
ஆளுநர் சபை உறுப்பினர்

**எம் பி டி யு கே மாபா பத்திரண**
தவிசாளர்

## 4.3 பணப் பாய்ச்சல் கூற்று

### அட்டணை 4.3. பணப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **தொழில்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பண ஓட்டம்** | | | |
| தொழில்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான மிகை/ (குறை) | | (7,426,318.90) | (2,411,905.03) |
| **சீராக்கல்** | | | |
| அமைச்சுப் பதவியினருக்கான வேதனம் | 23 | 37,142.85 | 825,332.26 |
| பெறுமானத் தேய்மானம் | 11 | 2,005,803.84 | 1,708,668.62 |
| நிலையான வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம் | | (2,604,707.06) | (2,433,066.36) |
| உழைக்கும் மூலதன அறவீடுகளுக்கு முன்னரான தொழிற்படு இலாபம் | | **(7,988,079.27)** | **(2,310,970.51)** |
| பொருட் பட்டியலில் (அதிகரிப்பு) / குறைப்பு | 15 | 83,095.70 | (129,875.48) |
| பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | 25 | 8,692,918.89 | 4,226,215.92 |
| பண முற்பணங்களில் (அதிகரிப்பு) / குறைப்பு | 18 | 1,250.00 | 3,750.00 |
| உறப்படுபவைகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | 20 | 4,491,128.71 | (1,928,193.39) |
| முன்பாக பெறப்பட்ட வருமானத்தில் (அதிகரிப்பு)/ குறைப்பு | 17 | (12,913.75) | 681,000.00 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | 21 | (4,408,727.67) | 296,500.00 |
| **தொழில்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணம்** | | **858,672.61** | **838,426.54** |
| நிதிச் செலவு | | **-** | **-** |
| **தொழில்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணப் பாய்ச்சல்** | | **858,672.61** | **838,426.54** |
| | | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பணப் பாய்ச்சல்** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திலிருந்தான பெறுகைகள் | 14 | (1,281,812.30) | (620,002.99) |
| நிலையான வைப்பு முதலீடுகள் | | (10,000,000.00) | - |
| **முதலீட்லீடுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணப்பாய்ச்சல்** | | **(11,281,812.30)** | **(620,002.99)** |
| | | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான பணப்பாய்ச்சல்** | | | |
| மூலதன மீள்பெறுகை | 22 | 1,000,000.00 | 198,553.00 |
| நிதிச்செயற்பாடுகளிலிருந்தான தேறிய பணப் பாய்ச்சல் | | **1,000,000.00** | **198,553.00** |
| | | | |
| பணமும் பணத்திற்கு சமமானவற்றில்தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | (9,423,139.69) | 3,039,197.98 |
| ஆண்டின் ஆரம்பத்தில் பணமும் பணத்திற்கு சமமானவையும் | 19 | 19,918,387.00 | 16,879,189.02 |
| **ஆண்டிறுதியில் பணமும் பணத்திற்கு சமமானவையும்** | 19 | 10,495,247.31 | **19,918,387.00** |

## 4.4 நிதிக் கூற்றுக் குறிப்புகள்

### 4.4.1 நிறுவனம்சார் தகவல்கள்

#### 4.4.1.1 பொது அறிமுகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நியதிச்சட்ட நிறுவகமாகும். தொழில் திணைக்களத்தின் பணியாளர் கல்விப் பிரிவை மறுசீரமைத்ததன் பின்னர், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 2007 செப்டம்பர் மாதத்தில் தனி நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டிருந்துடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தினால் நிறுவகத்திற்கு சட்டவலுவளிக்கப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் அடிப்படையில், இந்த நிறுவகம், அரசதுறை வேலையாட்களை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகிய முத்தரப்பு பங்குதாரர்களைக் கொண்ட ஆளுநர்கள் சபையால் நிருவகிக்கப்படுகின்றது. தற்போது, இது கொழும்பு 05 நாரஹேன்பிட்டி, தொழில் செயலகத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ளது.

#### 4.4.1.2 முக்கியமான செயற்பாடுகளும், தொழிற்பாடுகளின் தன்மையும்

தொழில் சட்டத் துறை மற்றும் தொழில் துறை உறவுகள் தொடர்பான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல், வேலைத்தலத்தின் ஆக்கத்திறனை அதிகரித்தல் மற்றும் வெளியீடுகளைத் தயாரித்தல் ஆகியவை இந்நிறுவகத்தின் முதன்மையான பணிகளாகும்.

#### 4.4.1.3 நிறுவகத்தின் பதவியினர்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, 2007 செப்டம்பர் மாதத்தில் அதன் தொழிற்பாட்டு செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த போதிலும், நிறுவகத்தின் பதவியணிக்கு 2014 மார்ச் மாதத்திலேயே முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இடைக்காலத்தில், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தால் தொழிற்பாட்டு பதவியினர் நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்துடன், அவர்களின் சம்பளம் அந்தந்த நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளங்கள்,வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் ஆகியவற்றால் வழங்கப்படுகின்றன.

#### 4.4.1.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி முகாமைத்துவம்

இந்நிறுவகத்தின் நிதி முகாமைத்துவம், 2011 செப்டெம்பர் 30 வரை தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் பிற கட்டுப்பாடுகள் காரணமாக)

### 4.4.2. தயார்ப்படுத்தலுக்கான அடிப்படை

#### 4.4.2.1 இணக்க அறிக்கை

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, பணப் பாய்ச்சல் கூற்று, நிகரப்பங்கு மாற்றக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் விதித்துரைக்கப்பட்ட இலங்கை அரச துறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

#### 4.4.2.2 அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் திரட்டல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சீராக்கல்கள், பணவீக்க காரணிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 4.4.2.3 நிறுவகத்தின் நிலைப்பு

பணிப்பாளர்கள், நிறுவகம் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கான திறனை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் நிறுவகத்தை கலைப்பதற்கோ அல்லது அதன் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கோ உத்தேசிக்கவில்லை.

#### 4.4.2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

நிறுவகமானது, கிரமமாக அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை நாளதுவரைப்படுத்துவதுடன், அவை,முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளவற்றுடன் இணங்கவில்லையென்றால், சிறந்த சமர்ப்பிப்பொன்றை வழங்கும் நோக்கில் நடப்பு ஆண்டுடன் ஒத்துப்போவதற்கு தேவைப்படுத் தப்படுகின்றபோது மட்டுமே முன்னைய ஆண்டின் தரவுகள், தகவல்கள் மற்றும் கூற்றுக்கள் மீளவகைப்படுத்தப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன.

#### 4.4.2.5 தொழிற்படுகின்ற, கையாளப்படுகின்ற நாணயம்

நிதிசார் கூற்றுக்கள், தேசிய தொழில்சார் நிறுவகத்தின் தொழிற்பாட்டு மற்றும் வழங்கல் நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### 4.4.2.6 கணக்கீட்டுக் கொள்கைகளின் முக்கியத்துவம்

பின்வரும் கணக்கியல் கொள்கைகள் இந்த நிதி கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலப்பகுதிகளுக்கும் இணங்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

#### 4.4.3.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் செலவு அதன் கொள்வனவு விலையையும், அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டுக்காக வேலைசெய்யும் நிலைக்கு ஆதனத்தைக் கொண்டு வருவதற்கு நேரடியாக உறப்படுகின்ற செலவினையும் கொண்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அனைத்து பொருட்களும் ஆரம்பத்தில் செலவு கழிக்கப்படுகின்ற திரட்டிய பெறுமானத் தேய்வாக அல்லது மதிப்பிழந்த நட்டங்களில் பதியப்பட்டுள்ளன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பொருட்கள் செலவில் அல்லது நியாயமான மதிப்பு கழிக்கப்படுகின்ற திரட்டிய தேய்மானமாக அல்லது மதிப்பிழந்த நட்டங்களில் தெரிவிக்கப் படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பாகங்கள் இடைக்காலத்தில் மாற்றப்படுவதற்கு தேவைப்படுகின்றபோது, நிறுவகம் மாற்றப்பட்ட பகுதியை ஏற்றுக்கொள்வதுடன், புதிய பகுதியை அதன் சொந்த தொடர்புடைய பயன்பாட்டுக் காலத்துடனும், தேய்மானத்துடனும் ஏற்றுக்கொள்கின்றது. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், நியாயமான மதிப்பு நம்பகரமான முறையில் அளவிடப்படக்கூடிய நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், ஏதேனும் திரட்டிய தேய்மானத்தை மற்றும் திரட்டிய மதிப்பிழந்த நட்டைதை கழித்தைத் தொடர்ந்து மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படு கின்றன. மேலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 7 இன் நியதிகளின்படி, தேய்மான மானது, அத்தகைய சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பட்டுக் காலத்தின் மீதான செலவை தள்ளுபடி செய்வதற்காக, விரிவான வருமானக் கூற்றுக்கு ஆண்டொன்றுக்கு பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு முறையில் கட்டணம் அறவிறப்படுகின்றது.

பயன்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வருடாந்த வீதங்கள் பின்வருமாறு.

| | 2020 |
|---|---|
| இயந்திரமும் உபகரணமும் | 10 ஆண்டுகள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 13 ஆண்டுகள் (7.5%) |
| கணினிகள் | 10 ஆண்டுகள் |
| பெயர்ப்பலகைகள் மற்றும் ஏனையவை | 03 ஆண்டுகள் |
| புத்தகங்கள் | 05 ஆண்டுகள் |

2013.10.02 ஆம் திகதியிலுள்ளவாறான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை மதிப்பீட்டுத் திணைக்களம் மீள்மதிப்பிடு செய்துள்ளதுடன், உரிய அறிக்கை 2014.01.07 அன்று வழங்கப்பட்டுள்ளது.

### 4.4.3.2 பொருட் பட்டியல்

நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்பட்டியல் செலவில் வருமானம் மற்றும் செலவின கூற்றுக்களில் அறவிடப்பட்டுள்ளன.

### 4.4.3.3 பணமும் பணத்திற்கு சமமானவையும்

பணமும் பணத்திற்கு சமமானவையும் கையிலுள்ள பணத்தையும், வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தையும் உள்ளடக்குகின்றது.

### 4.4.3.4 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

தற்போதைய கடப்பாடு கடந்த கால நிகழ்விலிருந்து எழுகின்றபோது, வளங்களின் வெளியேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற தீர்ப்பனவுகள், பொருளாதார நன்மைகளை கொண்டிருக்கின்ற போது பொறுப்புகள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன் கொடுத்தவரின் கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியின் ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் ஐந்தொகையில் தற்போதைய பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன. கடந்த கால நிகழ்வின் விளைவாக நிறுவகம் சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றபோது ஐந்தொகையில் ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்படு வதுடன், கடப்பாட்டைத் திர்ப்பதற்கு நம்பகரமான மதிப்பீட்டை செய்யக்கூடிய தான பொருளாதார நன்மைகளின் வெளியேற்றமொன்று சாத்தியமானது.

### 4.4.3.5 வருவாய் அங்கீகாரம்

பொருட்கள் வழங்கப்பட்டு, மாற்றப்படுகின்றவிடத்து பொருட்கள் சேவைகளின் விற்பனை யிலிருந்து பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு பாயும் அளவிற்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது. நியாயமான பெறுமதியில் வரவுகள் மற்றும் பெறுகைகள், இலங்கை அரசாங்கத்திடமிருந்து அறவிடப்பட்ட வரிகளிலிருந்து கழிக்கப்பட்டவை மற்றும் விற்பனைகள் ஆகியவை விற்பனைகளாக குறிப்பிடப்படுகின்றன.

### வருவாய்க்கான அடிப்படை

வருமானமானது, பங்கேற்பாளர்கள் பணம் செலுத்தும் போது திரட்டல் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் காரணமாக, சில பங்கேற்பாளர்கள் நிறைவு செய்வதற்கு முன்னர் விலகியமை மற்றும் பல்வேறு காரணங்களால் சில பாடநெறிகளின் கட்டணங்களை அறவிடமுடியவில்லை. இந்த பெறத்தக்கவை வருவாயாகக் கருதப்படவில்லை. எனினும், அத்தகைய சந்தர்ப்பங்களில், அது சாத்தியமாயின் நிலுவைத் தொகையை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கற்கைநெறிகளின் ஒட்டுமொத்த வருமானம் கற்கைநெறியின் ஆண்டுக்காக தீர்மானிக்கப்படுகின்றது.

### 4.4.3.6 பெறத்தக்கவைகள்

வர்த்தகப் பெறத்தக்கவைகள், பெறமுடியாத, மற்றும் சந்தேகத்திற்கிடமான நிகர பொடுப்பனவுகள் மதிப்பிடப்பட்டுள்ள தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன. பிற பெறத்தக்கவைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து நிலுவைகளை பெறமுடியாத மற்றும் சந்தேகத்திற்கிடமான பெறத்தக்கவைகளுக்கான செலவு குறைந்த கொடுப்பனவுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 4.4.3.7 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது தனியொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்பை வழங்கும் நிறுவனமொன்றின் கீழ், பிற்பட்ட வேலைவாய்ப்பு நன்மைத் திட்டம் என்பதுடன், மேலும் தொகையை செலுத்துவதற்கு சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு எதுவும் இருக்காது. அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்படும் செலவுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு முறையே பணியாளர்களின் மொத்த வேதனங்களின் 12% மற்றும் 3% பங்களிப்பினைச் செய்துள்ளது.

#### 4.4.3.8 பணப் பாய்ச்சல் கூற்று

பணப்பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

4.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தவிசாளர்
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள், ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் அனுப்பப்படுகின்றது.

**டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

பிரதிகள்: 1. செயலாளர், தொழில் அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு

தவிசாளர்
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள், ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கருத்து

முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கலாக, 2020 டிசம்பர் 31 ஆம் திகதிலுள்ளவாறான நிதி நிலைமை அறிக்கை மற்றும் நிதிச் செயலாற்றுகை அறிக்கை, அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான நிகரபங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை மற்றும் பண ஓட்டக் கூற்று அத்துடன் நிதிக் கூற்றுக் குறிப்புகள் என்பவற்றை கொண்டுள்ள 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்படுவதாகிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2020 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இந்நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் அதன் பண ஓட்டம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை அதனுடன் இணைந்துள்ள நிதிக் கூற்றுக்கள் வழங்குகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கருத்துக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டுள்ளேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்களில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது கருத்துக்கு அடிப்படையொன்றை வழங்குவதற்கு நான் பெற்றுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை என்பதுடன் பொருத்தமானவையுமென்று நான் நம்புகின்றேன்.

### 1.2 நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் என்பது, இந்தக் கணக்காய்வுத் திகதியின் பின்னர் என்னிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற தகவல்கள் நிறுவகத்தின் ஆண்டறிக்கை 2020 இல் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், ஆனால், நிதிக் கூற்றுக்களிலும் அதன் மீதான எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்படாத தகவல்களைக் குறிக்கின்றன. முகாமைத்துவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏனைய தகவல்களுக்குப் பொறுப்பாவார்கள். நிதி அறிக்கைகள் பற்றிய எனது கருத்து ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், அதன் மீது நான் எந்த வகையிலும் உத்தரவாதம் வழங்கவில்லை அல்லது கருத்து எதனையும் வெளிப்படுத்தவில்லை.

நிதி அறிக்கைகள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பான எனது பொறுப்பு, கிடைக்கும் போதெல்லாம் ஏனைய தகவல்களைப் படித்து, நிதி அறிக்கைகள் அல்லது இல்லையெனில் பெற்ற எனது அறிவு மற்றும் ஏனைய தகவல்களுக்கு இடையில் பொருள் முரண்பாடுகள் உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வதாகும்.

நிறுவகத்தின் ஆண்ட றிக்கை 2020 இனைப் படிக்கும்போது, பொருள்சார் தவறான கூற்றுக்கள் உள்ளன என்று நான் முடிவுசெய்தால், அவற்றின் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு தெரிவிக்கப்படும். திருத்தப்படாத தவறான கருத்துக்கள் இன்னும் இருந்தால், அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உரிய காலத்தில் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான ஆளுகையுடன் பொறுப்பானவர்கள்

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை வழங்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், நிருவாகம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு, மோசடி அல்லது பிழை காரணமாக இருந்தாலும், பொருள் சார் தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது அவசியமானதாகும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், முகாமைத்துவம் நிறுவகத்தை கலைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு எந்த யதார்த்தமான மாற்றீடும் இல்லாதபட்சத்தில், நிலைத்திருப்பு தொடர்புபட்ட விடயங்கள் கணக்கீட்டின் அடிப்படையில் நிலைத்திருப்பினை பயன்படுத்தி வெளிப்படுத்துவது, நிறுவகத்தின் திறனை மதிப்பிடுவதற்கு நிருவாகமே பொறுப்பாகும்.

ஆளுகைக்கு பொறுப்பானவர்கள் நிறுவகத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாவார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிறுவகத்தினால் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாக, அதன் வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்களையும் பதிவேடுகளையும் நிறுவகம் பேணுவது அவசியமாகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது பிழையின் காரணமாக ஒட்டுமொத்தமாக நிதி அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக பொருள்சார் தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வொன்று, அது இருக்கும் போது எப்பொழுதும் ஒரு பொருள்சார் தவறான கூற்றைக் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழையிலிருந்து தவறான கூற்றுக்கள் எழலாம், மேலும் தனித்தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயன்படுத்துபவர்களின் பொருளாதார முடிவுகளில் அவை நியாயமான முறையில் செல்வாக்கு செலுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டால், அவை பொருளாகக் கருதப்படுகின்றன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வின் ஒரு பாகமாக, நான் தொழில்சார் தீர்ப்பை பிரயோகிப்பதோடு கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் ஐயுறவுவாதத்தை பேணுகின்றேன். மேலும்:

- மோசடி அல்லது பிழையின் காரணமாக இருந்தாலும், நிதிக் கூற்றுகளின் பொருள்சார் தவறான கூற்றின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுதல், அந்த அபாயங்களுக்குப் பதிலளிக்கும் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தல், ஆற்றுதல் மற்றும் எனது கருத்துக்கு அடிப்படையொன்றை வழங்குவதற்குப் போதுமான அத்துடன் பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறுதல். மோசடியின் விளைவாக ஒரு பொருள்சார் தவறான கருத்தைக் கண்டறியாத ஆபத்து, மோசடியில் கூட்டுச் சதி, மோசடி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகிவைற்றினை விளைவாக்கி பிழையின் விளைவாக ஏற்படுவதைவிட அதிகமாக உள்ளது.

- சூழ்நிலைமைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய அகக் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ளல், ஆனால் நிறுவகத்தின் அகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் முகாமைத்து வத்தினால் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- கணக்கீட்டின் தொடர்ச்சியான நிலைப்பின் அடிப்படையை முகாமைத்துவம் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு மற்றும் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருள்சார் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்றதா என்பது குறித்து முடிவுசெய்யவும், இது நிறுவகத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்பினைத் தொடர்வதற்கான திறனில் கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடும். பொருள்சார் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதி அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் குறித்து எனது கணக்காய்வாளரின் அறிக்கையில் கவனத்தை ஈர்த்தல் வேண்டும் அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், என் கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எனது கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் எனது முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகம் நிலைத்திருப்பினைத் தொடர்வதை நிறுத்தக்கூடும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதி அறிக்கைகள் நியாயமான சமர்ப்பிப்பினை அடையும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

கணக்காய்வின் போது நான் அடையாளம் கண்டுள்ள அகக் கட்டுப்பாட்டின் ஏதேனும் கணிசமான குறைபாடுகள் உள்ளடங்கலாக, குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நான் தொடர்புகொள்வேன்.

**2. பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

**2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன.**

2.1.1 அ. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டதுடன், எனது பரிசோதனை யின் மூலம் காணப்படுகின்ற வரையில் அதிகாரி முறையான நிதி அறிக்கைகளைப் பேணியுள்ளார்.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இயைந்துள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள், சடப்பொருள் விடயங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டவை ஆகியவற்றின் அடிப்படையில், பின்வரும் கூற்றுகளை வெளியிடுவதற்கு உத்தரவாதமளிக்கும் எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை.**

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், நிறுவகத்தின் நிருவாகக் குழுவின் எவரேனும் அங்கத்தவர் ஒருவர், நிறுவகத்தினால் கைச்சாத்திடப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் சாதாரண வியாபார அந்தஸ்திற்கு வெளியில் ஏதேனும் ஆர்வமுடையவரா, நேரடியான அல்லது வேறுவிதமாக ஏதேனும் ஆர்வத்தைக் கொண்டவரா.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, ஏற்புடைய எழுத்துமூலச் சட்டம் எதனையும் அல்லது நிறுவனத்தின் நிருவாகக் குழுவினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுகம் இணங்கவில்லையா என்பது தவிர்ந்தவை

| **சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் போன்றவற்றுடன் தொடர்புபட்டவை** | **அவதானிப்புகள்** |
| --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபம் (ஈ) பத்தி 3.1.2 | முன்னைய ஆண்டு தொடர்பான பொருட் கணக்கெடுப்பு செயற்பாடுகள் ஒவ்வொரு நிதியாண்டிலும் சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பௌதீக ரீதியில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், ஆய்வாண்டின்கீ ழ் வருடத்துடன் தொடர்புடைய பொருட் கணக்கெடுப்பு செயற்பாடுகள் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிக்குள் கூட நிறைவடையவில்லை. |

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் படி நிறுவகம் செயலாற்றியிருக்க வில்லையா.

2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் 3 (ஆ), 3 (இ), மற்றும் 3 (ஈ) ஆகிய உட்பிரிவுகளின் பிரகாரம் இந்நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள் தொழில் கற்கைகள் தொடர்பான சஞ்சிகைகள், நாளேடுகள், கால மஞ்சரிகள் மற்றும் நூல்களை வெளியிடுவதாகும். ஆய்வுகளை மேற்கொள்ளவும், நூலகங்கள் மற்றும் தகவல் சேவைகளை நிறுவவும், பராமரிக்கவும், அந்த நோக்கங்களை நிறைவேற்றவதற்கு 2021 மார்ச் 31 ஆம் திகதிக்குள் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், அதிகாரசபையின் வளங்கள் பொருளாதாரரீதியாகவும் பயனுறுதியாகவும், வினைத்திறனுடனும் கால வரையறைகளுக்கு உட்பட்டு பொருத்தமான சட்டங்களுக்கு இணங்கவும் பொருளாதாரரீதியாகவும் பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றதா.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்காக பேணப்பட வேண்டிய வங்கியின் மீதியை இனங்காணத் தவறியதன் காரணமாகவும் மேலதிகப் பணத்தை குறுகிய கால சேமிப்புத் திட்டமொன்றில் முதலீடு செய்ய தவறியதன் காரணமாகவும் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கியின் நடப்புக் கணக்கிலுள்ள மீதிகள் ‘ரூபா 5 மில்லியனிலிருந்து ‘ரூபா 21 மில்லியன் வரையானதாக இருந்தது. அதன் மூலம் நிறுவனம் எதிர்காலத்திற்காக சம்பாதித்திருக்கக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டது.

(ஆ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் 2001 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தின் அலுவலர் கல்விப் பிரிவிற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட வான் ஒன்று, தொழில் திணைக்களத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமாக தாபிக்கப்பட்டபோது தொழில் திணைக்களத்தின் அலுவலர் கல்விப் பிரிவிடம் கையளிக்கப்பட்ட போதிலும், வாகனம் முறையாக சுவீகரிக்கப்படவில்லை. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வாகனம் இயங்குவதிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட போதிலும், இந்த வாகனத்தின் அதே பதிவு எண்ணைக் கொண்ட ஒரு தனியார் உரிமையாளரிடம் வான் இருப்பதை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. அதனடிப்படையில், 2020 ஜனவரி 05 ஆம் திகதி நிறுவனத்தினால் கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதோடு, வாகன மூலக் கோப்பு

மற்றும் வாகனத்தின் மாற்றல் கோப்பினை நிறுவகத்திற்கு சமர்ப்பிக்குமாறு நீதிமன்ற உத்தரவின் ஊடாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்ட போதிலும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் கோப்புகளைச் சமர்ப்பிக்காத காரணத்தினால் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.

(இ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 45 என்பதுடன், உண்மையான பதவியணி 2020 டிசம்பர் 31 அன்று 17 ஆக இருந்து, அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 38 சதவீதமாக இருந்தது. இதேவேளை, 9 சிரேட்ட பதவிகளில் 06 பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

(ஈ) பரீட்சைப் பிரிவானது அரச துறைக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் தனியார் துறையின் நிறுவனத் தேவைகளைப் பொறுத்தும் பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்பு செய்தல், வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல் என்பவற்றுக்கான பரீட்சைகளை நடாத்துகின்றது. இருப்பினும், வினாத்தாள்கள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல் ஆகியவை சபையொன்றால் அல்லாமல் ஒரு நபரால் செய்யப்படுகின்றன என்பதுடன், தேர்வில் முரண்பாடுகள் ஏற்படும் அபாயமும் உள்ளது. மேலும், பரீட்சைகளை நடாத்துவதற்கான நிறுவனத்தின் உள்ளக நடைமுறைகளின் ஓட்ட வரைபுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை என்பதுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் இரகசியத்தன்மை பாதுகாப்புடன் தொடர்புடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வழங்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைகளின் போதுமான தன்மையை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை.

(உ) நிறுவகத்தின் ஆய்வு, வெளியீடு மற்றும் கருத்திட்டப் பிரிவு 2020 யூலை மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்துடன், அப்பிரிவிற்கு ஒரேயொரு பதில் உதவிப் பணிப்பாளர் மாத்திரமே இருப்பதோடு, 2021 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை வேறு எந்த பதவியினரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க, இத்துறையை தாபிப்பதற்கு விரும்பிய குறிக்கோள்களை அடைவதும் மிகவும் மெதுவாகவே உள்ளது.

(ஊ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பகுதி ஐ இன் (ஸ) பந்தியின் பிரகாரம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தொழில் அமைச்சின் விடயப்பரப்பிற்குள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களின் கீழ் உள்ளடக்கப்படவில்லை.

(எ) 2019 ஆம் ஆண்டு தொடர்பான ஆண்டறிக்கை 2021 ஏப்ரல் 10 ஆம் திகதியளவில் கூட பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

## 4.6 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட / எடுப்படுவதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள்

2.2.2 (அ) வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் எதிர்காலத்தில் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சுற்றறிக்கைகள் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட திகதியில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை பௌதீகரீதியாக முடிவு செய்ய வேண்டியதன் தேவை பற்றி பதவியினருக்கு விளக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய செயற்பாடுகளை உரிய திகதியில் நிறைவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3 வெளியீடுகளை உத்தியோகபூர்வமாக வெளியிடுதல் மற்றும் கருத்திட்டங்களின் விடயப் பரப்பை விரிவுபடுத்துதல் ஆகிய குறிக்கோளுடன் 2020 யூன் மாதத்தில் நடைபெற்ற 45 ஆவது ஆளும் சபையில் சமர்ப்பிப்புகளை மேற்கொண்டதன் பின்னர் பெறப்பட்ட அங்கீகாரத்திற்கு அமைவாக , வெளியீட்டுக் கருத்திட்டப் பிரிவொன்றை தாபிக்கப்பட்டு உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் தேசியதொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து இலக்குக் குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் - ஜேடுளு நேறளடநவவநச - என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் தொழில் கற்கைகள் தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் மோசமடைந்து வந்த கோவிட் -19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் “வேலையில் பெண்கள்“ என்ற கருப்பொருளின் கீழ் நடத்த திட்டமிடப்பட்டிருந்த ஆய்வுக் கருத்தரங்கு நடத்தப்படவில்லை. எவ்வாறாயினும், இது கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சின் செயலாளரின் ஆதரவில் 2021 மார்ச் 1 ஆம் திகதியன்று இணைய நிகழ்வொன்றாக நடைபெற்றிருந்தது. இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 ஆய்வுக் கட்டுரைகளின் ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வு குறித்த விளக்கக்காட்சிகளை வழங்கியிருந்ததுடன், மேலும் – சூம்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைபெற்ற நிகழ்வில் பல பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளடங்கலாக நேரடி பங்கேற்பாளர்கள் 60 பேர் பங்குபற்றியிருந்தனர்.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம், அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் காலவரையறைக்குள் மற்றும் பொருத்தமான சட்டங்களுக்கு இணங்கவும் கொள்வனவு செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டுள்ளன.

(அ) வங்கிக் கணக்கு ஐந்தொகையைச் சரிபார்த்ததன் பின்னர், வங்கிக் கணக்கின் இருப்புத் தொகையை ஆய்வு செய்து ஆளுங் குழுவுக்கு சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு, 2020.10.13 ஆம் திகதி நடைபெற்ற ஆளுநர்கள் சபையின் கூட்டத்தில் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன், 6 மில்லியன் ‘ரூபாவை நடப்புக் கணக்கில் வைத்திருப்பது பயனற்றது என்பதாலும், நடப்புக் கணக்கில் மாதாந்தச் செலவுகளுக்குப் போதுமான தொகையொன்றை வைப்பதற்கும் மீதியை நிலையான வைப்புத் தொகையில் வைப்பதற்கும் அல்லது வங்கியுடன் கலந்தாலோசித்து குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்வதற்கும் அனுமதி பெறப்பட்டது. எவ்வாறாயினும், கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக பயிற்சி திட்டங்கள் மற்றும் தேர்வுகளை நடத்துவது முடக்கப்பட்டதாலும், சரியான நேரத்தில் திறைசேரி கட்டுநிதி பெறப்படாததாலும், அது ஒத்திவைக்கப்பட்டதாலும், எதிர்பார்க்கப்பட்ட வருவாய் கிடைக்காததால் பணப் புழக்கத்தைப் பாதுகாப்பதற்கு உரிய பணத்தை நிலையான

வைப்புகளில் வைப்புச் செய்ய முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. தற்போதைய நிலமைப்படி, பணப்புழக்கத்தை உறுதி செய்வதற்கு போதுமான தொகையை நடப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கும், மீதமுள்ள தொகையை நிலையான வைப்புகளாக முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்த வான் தொடர்பாக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்த வாகனத்தின் மூலக் கோப்பு மற்றும் மாற்றல் கோப்பினை வழங்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த கோப்புகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டில் கோவிட் -19 பரவல் காரணமாக, நிறுவகம் நிதிசார் சிரமங்களை எதிர்கொண்டிருந்தது . இந்நிறுவகத்தின் தற்போதைய நிதி நிலைமை காரணமாக, இது நிறுவனத்தால் தாங்க முடியாத சுமையாக இருக்கும் என்பதால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணி யையும் பணிக்கமர்த்துவது சாத்தியமில்லை. மேலும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் தொகுதி தொடர்பில் மீளாய்வு ஒன்றை நடாத்தியதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கும் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) 2021 பெப்ரவரி 02 ஆம் திகதியன்று நடைபெற்ற ஆளுநர் சபையின் கூட்டத்தில், இரண்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, வளவாளர்களின் குழுவைத் தெரிவு செய்வதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், கொடுப்பனவு முறைகளை ஒழுங்குபடுத்து வதற்கும் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அவை, பரீட்சைப் பிரிவின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதையும், வெளி நிறுவனங்களுக்கு தரமான சேவையை வழங்குவதையும் இலக்காகக் கொண்டிருந்தன. பரீட்சை முறைகேடுகளைத் தடுப்பதற்கும், ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும், இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியதன் அவசியத்தை எங்கள் நிறுவனம் இனங்கண்டுள்ளதுடன், மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டித் தேவைப்படுகின்றது. ஆளுநர் சபை இவ்விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன் முடிவுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். எனினும், இதுவரை நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வை, அவதானிப்பின் கீழ் நடத்தப்பட்டுள்ளன என்பதைத் தங்களுக்குத் தெரிவழத்துக்கொள்ளப்படுகின்றது.

(உ) தற்பொழுது இந்நிறுவனத்திடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட மனித மற்றும் நிதி வளங்கள் தொடர்பில் தற்போதுள்ள மனித வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, இந்நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்கும், மனித வளங்களை அதிகரிப்பதற்கும் இடையில் சரியான நேரத்தில் சமநிலையைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஆய்வு, வெளியீடுகள் மற்றும் கருத்திட்டப் பிரிவுக்கு தேவையான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு ஆளுங் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்கிணங்க, தொற்றுநோய் நிலைமையின் பின்னர் நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பும் போது, சொல்லப்பட்ட பதவிகளுக்கு பொருத்தமான தகுதிவாய்ந்த அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஊ) 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

அரசியலமைப்பின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், அதன் நோக்கம், அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள், விசேட முன்னுரிமைகள் மற்றும் தொடர்புடைய நிறுவக மற்றும் சட்டக் கட்டமைப்பு என்பன தீர்மானிக்கப்படுவதனால், அதிமேதகு சனாதிபதி அவர்களின் அதிகாரங்களை மீறும் நிலையில் எமது நிறுவகம் இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இருப்பினும், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்துடன் தொடர்புடைய நிறுவனம்சார் மற்றும் சட்டக் கட்டுக்கோப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள், ஒழுங்குவிதுகளின் கீழ் அத்தகைய ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என தொழில் அமைச்சினூ டாக சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

(எ) 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය
## தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
## National Institute of Labour Studies

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය කම්කරු අමාත්‍යාංශය යටතේ ක්‍රියාත්මක වන ව්‍යවස්ථාපිත ආයතනයකි. මෙම ආයතනය 2007 සැප්තැම්බර් 11 වන දින ස්ථාපිත කරන ලද අතර 2010 අංක 12 දරන ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතන පනත මගින් බලාත්මක කරන ලදී. කම්කරු ක්ෂේත්‍රයේ ත්‍රෛපාර්ශව හවුල්කරුවන් වන සේව්‍ය, සේවක හා රජයේ සේවකයින්ගෙන් සැදුම්ලත් පාලක මණ්ඩලයක් මගින් පාලනය වේ. කම්කරු අණපනත්, නීති රීති රෙගුලාසි පිළිබඳව දැනුවත්, ඵලදායී ශ්‍රම බලකායක් නිර්මාණය කිරීම සඳහා අවශ්‍ය පුහුණු හා පර්යේෂණ කටයුතු සැලසුම් කිරීම සහ ක්‍රියාත්මක කිරීම මෙම ආයතනයේ මූලික කාර්යභාරයයි.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இந்த நிறுவகம், 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் சட்டத்தினால் வலுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிறுவகம், முத்தரப்பு அக்கறைதாரர்களான தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரச அலுவலர்களைக் கொண்ட ஆளுநர் சபையினால் நிருவகிக்கப்படுகின்றது. இந்நிறுவகத்தின் பிரதான பணி, தொழில் சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி அறிந்துள்ள பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுள்ள தொழில் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை வடிவமைப்பதும், நடைமுறைப்படுத்துவதுமாகும்,

The National Institute of Labour Studies is a statutory body functioning under the Ministry of Labor. This Institute was established on 11 September 2007 and was empowered by the National Institute of Labour Studies Act No. 12 of 2010. This Institute is governed by a governing body consisting of the tripartite partners, the employers, the employees and the public servants. The primary role of this Institute is to design and implement the training and research activities required to create an effective and productive workforce that is aware of labour Acts, Ordinance, laws, rules and regulations.

2 වන මහල, කම්කරු මහලේකම් කාර්යාලය, කොළඹ 05.
2 ஆவது தளம் தொழில் செயலகம், கொழும்பு 05.
2nd Floor, Labour Secretariat, Colombo 5.

Tel : 0112 786541/ 0112 786548 | Email : admin@nils.gov.lk | Web : www.nils.gov.lk

PRINTEC | 0112 815 816